**செ.வெ.எண்-29** **நாள்-12.09.2021**

**அரியலூர் மாவட்டம்**
**மாபெரும் கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாமினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.**

அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுகாதாரத்துறையின் சார்பில் மாபெரும் கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாமினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் இன்று (12.09.2021) துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலை வகித்தார்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

உலகளாவிய கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கொரோனா மூன்றாம் அலையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்வதற்கு கொரோனா தடுப்பூசியே பாதுகாப்பானதாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, அரியலூர் மாவட்டத்தில்ழ கொரோனா வைரஸ் மாபெரும் தடுப்பூசி முகாம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் 400 இடங்களில் 40,000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. இம்முகாமில், 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் தங்கள் வீட்டின் அருகே நடைபெறும் தடுப்பூசி முகாமில் தங்களுடைய ஆதார் அட்டை (அ) இதர அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை கொண்டு வந்து தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம்.

அரியலூர் மாவட்டத்தில் கொரொனா தடுப்பூசி முதல் தவணை 42 சதவீதமும் இரண்டாம் தவணை 9 சதவீதமும் என மொத்தம் 3,17,937 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. நமது நலவாழ்வு நமது கைகளில் என்பது போல அனைவரும் 100 சதவீத தடுப்பூசி செலுத்திக்கொண்டு, கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக அரியலூர் திகழ வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கீதாராணி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.பொ.சந்திரசேகர் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**